மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சுட்டிக்காட்டியது போன்று "Ayes have it", "Ayes have it", "Ayes have it". என்று சொல்லுவதிலே மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்த்து சொல்லுவது போல "'ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம், 'ஆம்' அதிகம்" என்று மூன்று தடவைகள் சொல்லலாம். "தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது" என்று சொல்லும்போது உறுப்பினர்கள் "ஆம்" என்றோ, "இல்லை" என்றோ சொல்லுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அந்த முறையில் "இல்லை" என்பவர்கள் அதிகமானால் "'இல்லை' அதிகம், 'இல்லை' அதிகம், 'இல்லை' அதிகம்" என்று சொல்லலாம்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்த நடைமுறையை இப்போது மன்ற முதல்வர் அவர்கள் சொன்னபடியே முடித்துக் கொள்வோம். ஏனென்றால், நடைமுறையை முதன்முதலாக நாமே முடிவு செய்கிற காரணத்தினால், எப்படிச் செய்வது என்று முடிவு செய்கிற அதிகாரம் அவைக்கு இருக்கிறது. அப்படியே செய்யலாம் என்று கருதுகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

3. அறிவிப்புக்கள் (தொடர்ச்சி).

(எ) பேரவையினர் வசதிக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : பேரவையினர் வசதிக் குழுவிற்குத் தேர்தல் நடத்துவதற்கு, ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி அவைத் தலைவர் வகுத்துள்ள விதிகளுக்கிணங்க வேட்பாளர்களின் நியமனத் தாள்கள் 23–3–1967, வியாழக்கிழமை, காலை 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத்தாள்கள் 23–3–1967, வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25–3–1967, சனிக் கிழமை, 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப் பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய எண்ணிக்கைக்கு அதாவது, பதினொன்றுக்கு மேற்படுமாயின் 27–3–1967, திங்கட்கிழமை, காலை 9 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஐ) ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதித்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்னிடம் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை அவைக்கு கொண்டு வரும் முன்னர் என் அனுமதி பெறவேண்டும். அனுமதி பற்றிய என் முடிவுகளை நாளை தெரிவிக்கிறேன்.